EQUIFAX

sidbi



# மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ்

தொகுதி XII- மே 2022

# பகுப்பாய்வு தொடர்புகள்

## ஈக்விஃபாக்ஸ்

**கிரண் சமுத்ராலா**
துணைத் தலைவர் -
பகுப்பாய்வு
*kiran.samudrala@equifax.com*

**ஸ்ருதி ஜோஷி**
உதவி துணைத்தலைவர்-
பகுப்பாய்வு
*shruti.joshi@equifax.com*

**வந்தனா பாஞ்சால்**
இணை மேலாளர்
*vandana.panchal@equifax.com*

## சிட்பி

**சஞ்சய் ஜெயின்**
பொது மேலாளர் - ஈ.ஆர். டி.ஏ
*erdav@sidbi.in*

**ரமேஷ் குமார்**
மேலாளர் - எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ
*rameshk@sidbi.in*

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிர்வாகச் சுருக்கம் | 04 |
| சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம் | 05 |
| குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம் | 06 |
| விநியோக போக்குகள் | 09 |
| தொழில்துறை இடர் தோற்ற விவரம் | 12 |
| புவியியல் வெளிப்பாடு | 14 |
| விரிவான மாநில தோற்றம்: ராஜஸ்தான் | 17 |
| லட்சிய மாவட்டங்கள் | 22 |
| வாடிக்கையாளர் தளத்தில் பகுப்பாய்வு | 24 |

# நிர்வாகச் சுருக்கம்

*MFI பல்ஸ் அறிக்கையின் 12வது பதிப்பு, டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள் மற்றும் இந்த காலகட்டத்தில் குறுநிதி (மைக்ரோஃபைனான்ஸ்) துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் ஸ்னாப்ஷாட்டை முன்வைக்கிறது.*

*டிசம்பர் 31 ஆம் தேதி 9.6 கோடி செயலில் உள்ள கடன்களின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ. 2,36,178 கோடி. ரூ. 66,849 கோடி மதிப்புள்ள கடன்கள் OND 21 இல் வினியோகிக்கப்பட்டுள்ளது. வங்கிசாரா நிதி நிறுவனங்களின் (NBFC) சராசரி கடன் அளவு அதிகமாக உள்ளது, இது தொழில்துறையின் கடன் அளவை விட அதிகமாக உள்ளது. தொழில்துறையின் நிலுவையில் உள்ள கடன்கள் (POS), டிசம்பர் 2020 முதல் டிசம்பர் 2021 வரை 3% ஆண்டு வளர்ச்சியைக் கண்டது மற்றும் செப்டம்பர் 2021 முதல் டிசம்பர் 2021 வரை காலாண்டுக்கு காலாண்டு (Q-o-Q) வளர்ச்சி 4% ஆக உள்ளது. நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்க்கு வங்கிகளும் அதை தொடர்ந்து வங்கிசாரா நிதி நிறுவனங்கள்-குறு நிதி (NBFC-MFI) களும் அதிக பங்களிப்பை வழங்குகின்றன.*

*OND 20 இலிருந்து OND 21 வரை வினியோகிக்கப்பட்ட தொகை 7% அதிகரித்துள்ளது. அனைத்து காலாண்டுகளிலும் வங்கிகளாலும் அதை தொடர்ந்து வங்கிசாரா நிதி நிறுவனங்கள்-குறு நிதி நிறுவனங்களாலும் (NBFC-MFI) அதிக கடன் வினியோகிக்கப்படுகிறது.. ரூ.30000 மற்றும் அதற்கு மேற்பட்ட கடன் அளவு வகை ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) நேர்மறையான வளர்ச்சியைக் கண்டது. 55%க்கும் அதிகமான கடன்கள் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையிலான கடன் அளவு வகையின் கீழ் வழங்கப்படுகின்றன. சராசரி கடன் அளவு, OND '20 இலிருந்து OND 21 வரையிலான காலகட்டத்தில் 23% அதிகரித்துள்ளது.*

*செப்டம்பர் 2021ல் 18.77% ஆக இருந்த 1-179 நாட்கள் கடந்த தவணை தவறுதல்கள், 2021 டிசம்பரில் 13.80% ஆகக் குறைந்துள்ளது. 60-179 நாட்கள் கடந்த தவணை தவறுதல்கள் செப்டம்பர் 2021 விட டிசம்பர் 2021ல் அதிகரித்துள்ளது. டிசம்பர் 31, 2021 நிலவரப்படி, முதன்மை 10 மாநிலங்கள் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கு 82% பங்களிக்கின்றன.*

*MFI தொழில்துறையில் தமிழ்நாடு ரூ.30,562 கோடி நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவுடன் முன்னணியில் உள்ளது. டிசம்பர் 31, 2021 நிலவரப்படி, நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் படி, தமிழ்நாடு, பீகார், மேற்கு வங்காளம், கர்நாடகா மற்றும் உத்தரபிரதேசம் ஆகியவை முதன்மை 5 மாநிலங்கள். மேற்கு வங்காளத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், தொழில்துறையின் தவணை தவறுதல்களை விட அதிகம்.*

*இந்த பதிப்பில் ராஜஸ்தானின் விரிவான மாநில தோற்றம் விவரிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 31, 2021 நிலவரப்படி ராஜஸ்தானின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ.10,812 கோடி. OND' 21 இன் போது ராஜஸ்தானில் ₹2,903 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. NBFC களின் சராசரி கடன் அளவு அனைத்து கடன் வழங்குபவர்களிலும் அதிகமாக உள்ளது. ராஜஸ்தானில் உள்ள அனைத்து கடன் வழங்குபவர்களிலும், லாப நோக்கமற்ற கடன் வழங்கும் நிறுவனங்களின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் மிகக் குறைவாக உள்ளது. AMJ' 21 தவிர மற்ற காலாண்டுகளில், 60%க்கும் அதிகமான கடன்கள், கடன் அளவு வகை ரூ.20000-50000 ல் வழங்கப்பட்டுள்ளன. டிசம்பர் 2020 முதல் டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில், ராஜஸ்தான், நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில் 15% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் கண்டது. செப்டம்பர் 2021 முதல் டிசம்பர் 2021 வரை, ராஜஸ்தானில் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் ஒட்டுமொத்தமாக அதிகரித்துள்ளன.*

*MFI பல்ஸ் அறிக்கையின் 12வது பதிப்பில், 31 டிசம்பர் 2021 அன்று வாடிக்கையாளர் நிலைப் பகுப்பாய்வை நாங்கள் உள்ளடக்கியுள்ளோம். 70%க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு ஒரு கடன் நிலுவைத் தொகை மட்டுமே உள்ளது. லாப நோக்கமற்ற MFIகள், இரண்டு நிலுவையில் உள்ள கடன்களுடன் கூடிய அதிக வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளன.*

## சொல் சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம்

- *ATS (Average Ticket Size) = Disbursed Amount/Number of Loans*
  *(சராசரி கடனின் அளவு) = வினியோகிகப்பட்ட தொகை / கடன்களின் எண்ணிக்கை*

- *DPD = Days Past Due -* திருப்பிசெலுத்த வேண்டிய காலம் கடந்த நாட்கள்

- *Live POS or Borrowers or Active loans = 0 to 179 DPD + New Accounts + Current Accounts*
  நேரடி நிலுவையில் உள்ள கடன்கள் (அ) கடனாளிகள் (அ) செயலில் உள்ள கடன்கள் = *0* லிருந்து *179 DPD* + புதிய கணக்குகள் + நடப்புக் கணக்குகள்

- *MFI = Microfinance Institution* குறுந்தொழில் நிதி நிறுவனம்

- *POS = Portfolio Outstanding* நிலுவையில் உள்ள கடன்களின் போர்ட்ஃபோலியோ

- *UT = Union Territory* யூனியன் பிரதேசம்

- *Aspirational Districts (AD) -* லட்சிய மாவட்டங்கள் -
  சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர் வளங்கள், நிதி சேர்க்கை, திறன் வளர்ச்சி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற கூட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில், மனித மேம்பாட்டு குறியீட்டை மேம்படுத்துவதற்காக ஜனவரி *2018* இல் *NITI* ஆயோக், இந்திய அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட மாவட்டங்கள் *(*தற்போதைய எண்ணிக்கை *117).*

- *1-179 = 1 to 179 DPD/Live POS*
- *1-29 = 1 to 29 DPD/Live POS*
- *30-59 = 30 to 59 DPD/Live POS*
- *60-89 = 60 to 89 DPD/Live POS*
- *90-179 = 90 to 179 DPD/Live POS*
- *30+* நாட்கள் தவணை தவறுதல் *(Delinquency) = 30-179 DPD/Live POS*
- *90+* நாட்கள் தவணை தவறுதல் *(Delinquency) = 90-179 DPD/Live POS*

- *OND'20 =* அக்டோபர் *2020* முதல் டிசம்பர் *2020* வரை
- *JFM'21 =* ஜனவரி *2021* முதல் மார்ச் *2021* வரை
- *AMJ'21 =* ஏப்ரல் *2021* முதல் ஜூன் *2021* வரை
- *JAS'21 =* ஜூலை *2021* முதல் செப்டம்பர் *2021* வரை
- *OND'21 =* அக்டோபர் *2021* முதல் டிசம்பர் *2021* வரை

EQUIFAX


sidbi



# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

# குறுநிதி தொழில்துறையின் சாராம்சம் – டிசம்பர் 31, 2021 நிலவரப்படி

| 31 டிசம்பர் 2021 – சாராம்சம் | வங்கிக | SFBs | NBFC-MFIs | NBFCs | Not for Profit MFIs | மொத்த |
|---|---|---|---|---|---|---|
| தனித்துவ, செயலில் உள்ள கடன் பெற்றவர் ஆயிரத்தில்) | 25,532 | 12,677 | 26,892 | 5,997 | 834 | 71,932 |
| செயலில் உள்ள | 36,177 | 15,591 | 36,395 | 6,505 | 1,102 | 95,770 |
| போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில் ) | 93,841 | 39,675 | 84,065 | 16,337 | 2,260 | 236,178 |
| விளியோகிக்கப்பட்ட தொகை- OND' 21 | 26,487 | 11,957 | 23,105 | 4,407 | **893** | 66,849 |
| சராசரி கடன் அளவு (ரூ.) - OND' 21 | 41,760 | 41,177 | 36,095 | 44,284 | 31,268 | 39,489 |
| 30+ Delinquency (POS) | 12.00% | 8.45% | 6.23% | 5.21% | 1.30% | 8.78% |
| 90+ Delinquency (POS) | 5.19% | 2.91% | 2.14% | 1.78% | 0.65% | 3.44% |





- *டிசம்பர் 31, 2021 நிலவரப்படி செயலில் உள்ள 9.6 கோடி கடன்களின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ 2,36,178 கோடியாக உள்ளது.*
- *OND' 21க்கான விநியோகத்தொகை ரூ. 66,849 கோடி*
- *NBFC களின் சராசரி கடன் அளவு அதிகமாக உள்ளது, இது OND'21க்கான தொழில்துறை கடன் அளவை விட அதிகமாக உள்ளது*
- *வங்கிகளின் 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், மொத்த தொழில்துறையின் தவணை தவறுகளை விட அதிகம்.*

# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்)

| விவரங்கள் | டிச' 20 | மார்' 21 | ஜூன் ' | செப்' 2 | டிச' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 96,683 | 109,867 | 95,674 | 92,725 | 93,841 |
| SFBs | 38,109 | 38,903 | 35,345 | 36,863 | 39,675 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 73,166 | 79,420 | 72,856 | 79,932 | 84,065 |
| NBFCs | 18,988 | 18,992 | 16,140 | 14,621 | 16,337 |
| லாபனோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 1,872 | 2,095 | 2,045 | 1,982 | 2,260 |
| மொத்த தொழில் துறை | 228,818 | 249,277 | 222,060 | 226,123 | 236,178 |
| காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சி விகிதம் % | 0% | 9% | -11% | 2% | 4% |

## சந்தைப் பங்கு போக்குகள் - கடன் வழங்குபவர் வகையின்படி




- செப்டம்பர் 2021 இலிருந்து டிசம்பர் 2021 வரை MFI தொழில்துறை காலாண்டுக்கு காலாண்டு (Q-o-Q) 4% வளர்ச்சியை கண்டது.
- MFI தொழில்துறையானது டிசம்பர் 2020 முதல் டிசம்பர் 2021 வரை ஆண்டுக்கு ஆண்டு 3% வளர்ச்சியைக் கண்டது
- வங்கிகள் மற்றும் அதை தொடர்ந்து என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐகள் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கு அதிக பங்களிப்பை வழங்குகின்றன.

EQUIFAX®

sidbi



# விநியோக போக்குகள்


EQUIFAX® Powering the World with knowledge ™

# விநியோக போக்குகள் - நிறுவனவாரியாக

**வினியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)**

| Lender Type | OND' 20 | JFM' 21 | AMJ' 21 | JAS' 21 | OND' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 100 | 111 | 41 | 77 | 63 |
| எஸ்.எஃப்.பி | 21 | 32 | 9 | 36 | 29 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 65 | 77 | 19 | 69 | 64 |
| என்.பி.எஃப்.சி | 7 | 11 | 3 | 8 | 10 |
| லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 2 | 3 | 1 | 2 | 3 |
| மொத்த தொழில் துɛ | 195 | 234 | 73 | 192 | 169 |

கடன் வழங்குபவர் வகையின்படி சந்தை பங்கு போக்குகள்





- *OND' 21* இன் போது வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை *OND '20* இலிருந்து *13%* குறைந்துள்ளது, இருப்பினும், அதே காலகட்டத்தில் வழங்கல் தொகை *7%* அதிகரித்துள்ளது
- அனைத்து காலாண்டுகளிலும், வங்கிகள் மற்றும் அதை தொடர்ந்து என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐகளால் அதிக கடன் வினியோகிக்கப்படுகிறது.
- கடன் வினியோகத்தை பொருத்தமட்டில், என்.பி.எஃப்.சி மற்றும் லாப நோக்கமற்ற எம்.எஃப்.ஐகள் *JAS' 21* இலிருந்து *OND' 21* வரை நேர்மறையான வளர்ச்சியைக் கண்டன.

# தொழில்துறையின் கடன் அளவு போக்குகள்

வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)

| கடன் அளவு | OND' 20 | JFM' 21 | AMJ' 21 | JAS' 21 | OND' 21 | ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி விகிதம் % |
|---|---|---|---|---|---|---|
| 0-10000 | 35 | 19 | 8 | 18 | 10 | -71% |
| 10000-20000 | 20 | 18 | 7 | 20 | 12 | -40% |
| 20000-30000 | 32 | 40 | 12 | 34 | 24 | -25% |
| 30000-40000 | 43 | 58 | 16 | 47 | 46 | 7% |
| 40000-50000 | 29 | 38 | 11 | 29 | 29 | 0% |
| 50000-60000 | 18 | 28 | 9 | 25 | 23 | 28% |
| 60000 க்கு மேல் | 18 | 33 | 9 | 19 | 25 | 39% |
| மொத்தம் | 195 | 234 | 73 | 192 | 169 | -13% |
| காலாண்டுக்கு காலாண்டு கடன் வினியோக வளர்ச்சி விகிதம் % | - | 20% | -69% | 163% | -12% | - |
| இந்தியாவின் சராசரி கடன் அளவு (ரூ.) | 32,109 | 38,789 | 35,793 | 35,110 | 39,489 | - |
| Q-o-Q சராசரி கடன் அளவு வளர்ச்சி விகிதம் % | - | 21% | -8% | -2% | 12% | - |

வினியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)




- *ரூ.50000 மற்றும் அதற்கு மேற்பட்ட கடன் அளவு வகை ஆண்டுக்கு ஆண்டு 25% வளர்ச்சியைக் கண்டது.*
- *55%க்கும் அதிகமான கடன்கள் ரூ.20000 - 50000 கடன் அளவு வகையின் கீழ் வழங்கப்படுகின்றன.*
- *OND' 20 to OND' 21 வரையான காலகட்டத்தில் சராசரி கடன் அளவு 23% அதிகரித்துள்ளது.*





# தொழில்துறை இடர் தோற்றவிவரம்

## தவணை தவறுதல்களின் போக்குகள்

காலம் கடந்த நாட்களின்படி தவணை தவறுதல்கள்

| அறிக்கை காலாண்டு | 1-29 நாட்கள் கடந்தது | 30-59 நாட்கள் கடந்தது | 60-89 நாட்கள் கடந்தது | 90-179 நாட்கள் கடந்தது | 1-179 நாட்கள் கடந்தது |
|---|---|---|---|---|---|
| டிச ' 20 | 7.50% | 4.73% | 3.49% | 4.96% | 20.68% |
| மார்ச்' 21 | 4.55% | 2.90% | 2.01% | 4.12% | 13.58% |
| ஜூன் ' 21 | 14.90% | 10.14% | 3.38% | 3.01% | 31.43% |
| செப் ' 21 | 8.64% | 5.44% | 1.74% | 2.95% | 18.77% |
| டிச' 21 | 5.03% | 3.19% | 2.14% | 3.44% | 13.80% |

காலம் கடந்த நாட்களின்படி தவணை தவறுதல்கள்





- *செப்டம்பர் 2021 இல் 18.77% ஆக இருந்த 1-179 நாட்கள் கடந்த தவணை தவறுதல்கள், டிசம்பர் 2021 இல் 13.80% ஆகக் குறைந்துள்ளது.*
- *60-179 நாட்கள் கடந்த தவணை தவறுதல்கள், செப்டம்பர் 2021 இலிருந்து டிசம்பர் 2021 இல் அதிகரித்துள்ளது*



# புவியியல் வெளிப்பாடு

# மாநிலம்/ யூனியன் பிரதேச வாரியான நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ- டிசம்பர் 31, 2021 நிலவரப்படி




இந்த வரைபடம் ஒரு பொதுவான விளக்கப்படம் மட்டுமே மற்றும் இது குறிப்பு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை.

- *டிசம்பர் 31, 2021 நிலவரப்படி, முதன்மை 10 மாநிலங்கள் நிலுவையில் போர்ட்ஃபோலியோவிற்கு 82% பங்களிக்கின்றன*
- *MFI தொழில்துறையில், ரூ.30,652 கோடி நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவுடன் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.*
- *டிசம்பர் 31, 2021 நிலவரப்படி தமிழ்நாடு, பீகார், மேற்கு வங்காளம், கர்நாடகா மற்றும் உத்தரபிரதேசம் ஆகியவை முதன்மை 5 மாநிலங்கள்*

## *31 டிசம்பர் 2021 நிலவரப்படி, மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக 90+ நாட்கள் தவணை தவறுதல்கள்*

**மொத்த 90+ நாட்கள் தவறிய தவணைகள்**
**3.44%**





**முதன்மை 5 மாநிலங்களின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் பின்வருமாறு :**

| தமிழ் நாடு | பீகார் | மேற்கு வங்காளம் | கர்னாடகா | உத்திர பிரதேசம் |
|---|---|---|---|---|
| 2.54% | 2.71% | 7.88% | 2.01% | 2.01% |

**மேற்கு வங்காளத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், தொழில்துறையின் 3.44% தவணை தவறுதல்களை விட அதிகம்**

குறிப்பு : நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் படி தவணை தவறுதல்கள் கணக்கிடப்பட்டுள்ளது.





# விரிவான மாநில தோற்றம் : ராஜஸ்தான்


# ராஜஸ்தான் : மாநில தோற்றம்

| ராஜஸ்தான் மானில தோற்றம் 31 டிச 2021 அன்று | Banks | SFBs | NBFC-MFIs | NBFCs | Not for Profit MFIs | Total Industry |
|---|---|---|---|---|---|---|
| செயலில் உள்ள கடன்கள் (ஆயிரத்தில் ) | 2,107 | 556 | 1,738 | 193 | 9 | 4,603 |
| போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில் ) | 4,765 | 1,334 | 4,163 | 534 | 16 | 10,812 |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் சந்தை பங்கு | 44% | 12% | 39% | 5% | 0% | - |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) - OND' 21 | 1,192 | 371 | 1,180 | 154 | 6 | 2,903 |
| சராசரி கடன் அளவு (ரூ.) - OND' 21 | 36,209 | 37,792 | 36,319 | 42,946 | 31,738 | 36,744 |
| 30+ நாட்கள் தவணை தவறுதல்கள் (POS) | 9.73% | 6.61% | 6.83% | 7.07% | 3.85% | 8.09% |
| 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் (POS) | 4.03% | 2.75% | 2.25% | 2.21% | 1.34% | 3.09% |


**செயலில் உள்ள கடன்கள் ('000)**




**போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்)**




**வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) -OND' 21**




வங்கிகள் எஸ்.எஃப்.பி என்.பி.எஃப்.சி=எம்.எஃப்.ஐ என்.பி.எஃப்.சி லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ


- டிசம்பர் 31, 2021 நிலவரப்படி ராஜஸ்தானின் போர்ட்ஃபோலியோ ரூ 10,812 கோடி
- போர்ட்ஃபோலியோ நிலுவைக்கான அதிக பங்களிப்பு வங்கிகள் அதைத் தொடர்ந்து என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ கள் வழங்குகின்றன.
- OND' 21ல் ராஜஸ்தானில் ரூ 2,903 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அனைத்து கடன் வழங்குபவர்களிலும், என்.பி.எஃப்.சி களின் சராசரி கடன் அளவு அதிகமாக உள்ளது
- ராஜஸ்தானில் உள்ள அனைத்து கடன் வழங்குபவர்களிலும், லாப நோக்கமற்ற எம்.எஃப்.ஐ களின் 90 நாட்கள் தவணை தவறுதல்கள், மிகக் குறைவு.

# ராஜஸ்தான் – தொழில்துறையின் கடன் அளவு போக்குகள்

***விநியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)***

| கடன் அளவு | OND'20 | JFM'21 | AMJ'21 | JAS' 21 | OND'21 | Y-o-Y growth rate % |
|---|---|---|---|---|---|---|
| 0-10000 | 88 | 93 | 37 | 94 | 59 | -33% |
| 10K-20K | 40 | 75 | 32 | 70 | 43 | 8% |
| 20K-30K | 168 | 224 | 59 | 164 | 107 | -36% |
| 30K-40K | 274 | 362 | 73 | 247 | 261 | -5% |
| 40K-50K | 137 | 211 | 49 | 158 | 145 | 6% |
| 50K-60K | 74 | 137 | 36 | 108 | 93 | 26% |
| 60K Plus | 80 | 135 | 38 | 79 | 82 | 2% |
| மொத்தம் | 861 | 1,237 | 324 | 920 | 790 | -8% |
| Q-o-Q loan disbursal growth rate % | - | 44% | -74% | 184% | -14% | - |
| All India ATS (`) | 35,204 | 37,419 | 35,797 | 34,942 | 36,744 | - |
| Q-o-Q ATS growth rate % | - | 6% | -4% | -2% | 5% | - |

**விநியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்h)**





- *ராஜஸ்தானில் விநியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை OND 20 லிருந்து OND 21 வரையான காலகட்டத்தில் 8% குறைந்துள்ளது.*
- *AMJ' 21 தவிர மற்ற அனைத்து காலாண்டுகளிலும் 60% மேலான கடன்கள் ரூ. 20000 – ரூ.50000 வரையிலான கடன் அளவில் விநியோகிக்கப்பட்டுள்ளது.*
- *ராஜஸ்தானின் சராசரி கடன் அளவு, JAS' 21 லிருந்து OND'21 இல் 5%, மேலும் OND' 20 லிருந்து வரை 4% வளர்ந்துள்ளது.*

# ராஜஸ்தானின் போர்ட்ஃபோலியோ போக்குகள்

**நிலுவையிலுள்ள போர்ட்ஃபோலியோ (ரூ. கோடியில்)**


| விவரங்கள் | டிச' 20 | மார்' 21 | ஜூன்' | செப்' 21 | டிச' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 4,222 | 5,346 | 4,768 | 4,844 | 4,765 |
| சிறு நிதி வங்கிகள் (எஸ்.எஃப்.பி) | 1,173 | 1,300 | 1,177 | 1,280 | 1,334 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 3,261 | 3,771 | 3,389 | 3,860 | 4,163 |
| என்.பி.எஃப்.சி | 748 | 665 | 531 | 496 | 534 |
| லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 3 | 3 | 2 | 14 | 16 |
| ராஜஸ்தான் | 9,407 | 11,085 | 9,867 | 10,494 | 10,812 |
| காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சி விகிதம் % | - | 18% | -11% | 6% | 3% |




- *ராஜஸ்தானில், நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ, டிசம்பர் 2020 முதல் டிசம்பர் 2021 வரையிலான காலகட்டதில் ஆண்டுக்கு ஆண்டு 15% வளர்ச்சியை க் கண்டது*
- *லாப நோக்கம் இல்லாத குறுநிதி நிறுவனங்கள் டிசம்பர் 2020 முதல் டிசம்பர் 2021 வரை 433% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் கண்டுள்ளன. அதை தொடர்ந்து, அதே காலகட்டத்தில் என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ கள் 28% வளர்ச்சி கண்டு உள்ளன*
- *நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கான பங்களிப்புகளில் 80% க்கும் அதிகமானவை வங்கிகள் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்கள்*

# ராஜஸ்தான்– 90+ நாட்கள் தவறிய தவணைகளின் போக்குகள்

| வழங்குனர் வகை | டிச' 20 | மார்' 21 | ஜூன்' | செப்' 21 | டிச' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 1.78% | 1.67% | 1.52% | 2.29% | 4.03% |
| சிறுநிதி வங்கிகள் | 2.78% | 2.86% | 1.91% | 3.87% | 2.75% |
| என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ | 84% | 2.04% | 2.65% | 1.73% | 2.25% |
| வங்கி சாரா நிதி நிறுவனங்ள் | 1.63% | 2.28% | 3.63% | 4.10% | 2.21% |
| லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | 4.25% | 4.25% | 1.47% | 2.26% | 1.34% |
| ராஜஸ்தான் | 2.26% | 1.98% | 2.07% | 2.36% | 3.09% |




- செப்டம்பர் 2021 இலிருந்து டிசம்பர் 2021 வரையான காலாண்டில் ராஜஸ்தானின் ஒட்டுமொத்த 90+ நாட்கள் தவறிய தவணைகள் அதிகரித்துள்ளன.
- செப்டம்பர் 2021 உடன் ஒப்பிடும்போது, சிறுநிதி வங்கிகள், வங்கிசாரா நிதி நிறுவனங்கள், மற்றும் லாப நோக்கமற்ற குறு நிதி நிறுவனங்களின் 90+ தவறிய தவணைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது.
- டிசம்பர் 2021 நிலவரப்படி, ராஜஸ்தானின் ஒட்டுமொத்த 90+ நாட்கள் தவணை தவறுதல்களைவிட வங்கிகளின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் அதிகம்.




# லட்சிய மாவட்டங்கள்

# லட்சிய மாவட்டங்கள் – டிசம்பர் 2021 – ஓர் கண்ணோட்டம்


| லட்சிய மாவட்டங்களின் வளர்ச்சி விவரங்கள் | டிசம்பர் 2017 | டிசம்பர் 2021 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| தீவிரமாக வாடிக்கையாளர்களை சென்றடைதல் (ஆயிரத்தில்) | 4,155 | 8,618 | 107% |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 14,374 * | 35,343** | 146% |
| செயலில் உள்ள கடன்கள் (ஆயிரத்தில்) | 6,925 | 13,363 | 93% |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ. கோடியில்) | 11,175 | 31,918 | 186% |
| 30+ நாட்கள் தவறிய தவணைகள் | 1.54% | 6.87% | - |
| 90+ நாட்கள் தவறிய தவணைகள் | 0.75% | 2.70% | - |

- *டிசம்பர் 31 ன் படி லட்சிய மாவட்டங்களின் 1.33 கோடி செயலில் உள்ள கடன்களின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ. **31,918** கோடி*
- *லட்சிய மாவட்டங்களில் தீவிர வாடிக்கையாளர் ஊடுருவல் டிசம்பர் 2017 உடன் ஒப்பிடும்பொழுது டிசம்பர் 2021ல் 107% அதிகரித்துள்ளது.*
- *ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021 வரை ரூ.35,343 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன*
- *வங்கிகள் மற்றும் SFBகளின் 30+ மற்றும் 90+ நாட்கள் தவறிய தவணைகள், லட்சிய மாவட்டங்களின் ஒட்டுமொத்த 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்களை விட அதிகம்*

**போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்)**





**வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) – ஜன'21 முதல் டிச'21 வரை**




**Banks SFBs NBFC-MFIs NBFCs Not for Profit MFIs**

*30+ மற்றும் 90+ நிலுவையில் உள்ள கடன்களின் தவணை தவறுதல்கள் - கடன் வழங்குபவர் வாரியாக*




குறிப்பு : *கடன் வியியோகம் ஜனவரி **2017** முதல் டிசம்பர் **2017** வல

**கடன் வினியோகம் ஜனவரி **2021** முதல் டிசம்பர் **2021** வரை

நிலுவையில் உள்ள கடன்களின்




# வாடிக்கையாளர் தளத்தில் பகுப்பாய்வு

Powering the World with knowledge ™

# டிசம்பர் 31, 2021ன் படி வாடிக்கையாளர் தளத்தில் பகுப்பாய்வு

தனித்துவமான, செயலில் உள்ள கடன் பெற்றவர் (ஆயிரத்தில்)




- ஒரு கடன் நிலுவையில் உள்ள வாடிக்கையாளர்கள் **(0-179 DPD)**
- இரண்டு கடன்கள் நிலுவையில் உள்ள வாடிக்கையாளர்கள் **(0-179 DPD)**
- மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட கடன்கள் நிலுவையில் உள்ள வாடிக்கையாளர்கள் **(0-179 DPD)**

- லாப நோக்கமற்ற MFIகள், 2 கடன்கள் நிலுவையில் உள்ள அதிக வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளன
- 70%க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு 1 நிலுவைத் தொகை மட்டுமே உள்ளது

## இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி பற்றி :

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, **1990** இல் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி **(SIDBI)**, குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் நிதி, மேம்பாடு மற்றும் ஒத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மை நிதி நிறுவனம் ஆகும். பல ஆண்டுகளாக, சிட்பி அதன் பல்வேறு நிதி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம், சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல நம்பகமான நிறுவனங்களுடன் கைகோர்த்து, மொத்த **MSME** ஸ்பெக்ட்ரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஷன் **2.0** இன் கீழ் **SIDBI**, ஃபின்டெக் கடன் வழங்கும் பிரிவில் கிரெடிட் டேட்டா நுண்ணறிவுகளுக்கு, மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் தவிர, எம்எஸ்எம்இ துறையில் தகவல் சமச்சீரற்ற தன்மைக்கு தீர்வு காண, எம்எஸ்எம்இ பல்ஸ், எம்எஸ்எம்இ மற்றும் கிரிசிடெக்ஸின் ஹெல்த் டிராக்கர், எம்எஸ்இ உணர்வுகள் மற்றும் அபிலாஷைகளை அளவிடுவதற்கு, தொழில்துறை கடன் வழங்குபவர்கள் மற்றும் ஃபின்டெக் பல்ஸ் பற்றிய ஒரு விரிவான அறிக்கை, போன்ற பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

## குறுநிதி வெளியில் சிட்பியின் பங்கு :

குறுநிதி நிறுவன இயக்கத்தை ஆதரிப்பதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய குறுநிதி இயக்கத்தை மேம்படுத்துவதில் *SIDBI* முன்னோடி பங்கு வகித்துள்ளது. மைக்ரோஃபைனான்ஸின் கீழ், மார்ச் *2020* நிலவரப்படி, *100*க்கும் மேற்பட்ட *MFI*களுக்கு வங்கி ஒட்டுமொத்தமாக ரூ.*19,871* கோடியை அனுமதித்துள்ளது.. *MFI* களுக்கான கடன் மற்றும் பங்கு ஆதரவு, இந்த நிறுவனங்களுக்கான திறன் மேம்பாட்டு ஆதரவு மற்றும் பெருநிறுவன நிர்வாக கலாச்சாரத்தை உள்ளீர்த்துக்கொள்வது, இணக்க மதிப்பீட்டு கருவிகள் *(compliance assessment tools)* போன்றவற்றை ஆதரிப்பதன் மூலம் நன்கு பூர்த்தி செய்யப்படுகிறது. குறுநிதி தொழில் துறையை, பலவீனமான தொடக்கத்திலிருந்து ஒரு முழுமையான தொழில் பிரிவுக்கு முன்னேற்றுவதில் உதவியது மட்டுமல்லாது, அதன் இணை *MFI* களில் *8* பேர், சிறுநிதி வங்கிகளாகவும் *(SFBs)/* /யுனிவர்சல் வங்கிகளாகவும் மாற்றியதில் சிட்பி பங்கு வகித்துள்ளது. குறுநிதி வழங்குவதில் *(micro lending)*, சிறு கடன்களை நேரடியாக *SIDBI* இலிருந்து (கூட்டாண்மை ஏற்பாடுகள் மூலம்), வட்டி விகிதத்தில் சந்தை விகிதங்களை விடக் குறைவாகக் கிடைக்கச் செய்தது ஒரு புதுமையான முயற்சியாகும். இந்த "பிரயாஸ்" என்று பெயரிடப்பட்ட முயற்சியின் கீழ், மிகவும் ஏழ்மையில் உள்ள மைக்ரோ கடன் வாங்குபவர்களுக்கு சிறிய அளவு கடன்களை ரூ. *0.50* லட்சம் முதல் ரூ. *5* லட்சம் வரை, கூட்டாண்மை ஏற்பாடு மாதிரியின் கீழ், சந்தை விகிதங்களை விட ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி விகிதங்களுடன் இந்த வங்கி வழங்கி வருகிறது.

## ஈக்விஃபாக்ஸ் பற்றி :

ஈக்விஃபாக்ஸ் என்பது உலகளாவிய தகவல் தீர்வுகள் நிறுவனமாகும். இது நம்பகமான தனிப்பட்ட தரவு *(data)*, புதுமையான பகுப்பாய்வு, தொழில்நுட்பம் மற்றும் தொழில் நிபுணத்துவத்தை அளித்து, உலகெங்கிலும் உள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அறிவை நுண்ணறிவுகளாக மாற்றி அதன் மூலம் அதிக தகவலறிந்த வணிக மற்றும் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க உதவும் ஆற்றல் அளிக்கிறது.

அட்லாண்டா, ஜீஏ வை தலைமையிடமாக கொண்ட ஈக்விஃபாக்ஸ், வட அமெரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் *24* நாடுகளில் செயல்படுகிறது அல்லது முதலீடு செய்துள்ளது. இது ஸ்டாண்டர்ட் & புவர்ஸ் *(S&P) 500®* இன்டெக்ஸில் உறுப்பினராக உள்ளது மற்றும் அதன் பொதுவான பங்கு நியூயார்க் பங்குச் சந்தையில் *(NYSE) EFX* சின்னத்தில் வர்த்தகம் செய்யப்படுகிறது. ஈக்விஃபாக்ஸ் உலகம் முழுவதும் *11,000* ஊழியர்களை பணியில் அமர்த்தி உள்ளது. கடன் துறையில் *120* ஆண்டுகளுக்கும் மேலாக உலகளாவிய பாரம்பரியத்துடன் உள்ள ஈக்விஃபாக்ஸ், *2010* இல் இந்திய சந்தையில் ஒரு இருப்பை நிறுவியது மற்றும் சிஐசியாக*(CIC)* செயல்பட ரிசர்வ் வங்கியால் உரிமம் பெற்றது. கடந்த *9* ஆண்டுகளில், இந்த கடன் பணியகம், வங்கிகள், *NBFC* கள், *MFI* கள் மற்றும் காப்பீட்டாளர்கள் உட்பட *4000+* உறுப்பினர்களாக வளர்ந்துள்ளது. இந்த உறுப்பினர்கள் மில்லியன் கணக்கான இந்திய மக்கள்தொகை மற்றும் அதன் நுகர்வோர்களின் திருப்பிச் செலுத்தும் தகவல்களின் தரவை வழங்குகிறார்கள். *2014* ஆம் ஆண்டில், ஈக்விஃபாக்ஸ் ஒரு பகுப்பாய்வு நிறுவனத்தை வாங்கியதன் மூலம் இந்தியாவில் அதன் தடம் மேலும் வளர்ந்தது. ஈக்விஃபாக்ஸ் அனலிட்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்பது இந்தியாவில் ஈக்விஃபாக்ஸின் முழுச் சொந்தமான பகுப்பாய்வு நிறுவனமாகும். இது இணையற்ற தனிப்பயனாக்கப்பட்ட பகுப்பாய்வு தீர்வுகளை வழங்கி, வணிகங்களின் செயல்திறன் மற்றும் நுகர்வோரின் வாழ்க்கை இரண்டையும் வளமாக்குகிறது.


### கருத்து மறுப்பு

இந்த மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் அறிக்கையை (அறிக்கை) ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் லிமிடெட் (ஈக்விஃபாக்ஸ்) தயாரிக்கிறது. அறிக்கையை அணுகி பயன்படுத்துவதன் மூலம் பயனர் அத்தகைய பயன்பாடு இந்த கருத்து மறுப்புக்கு உட்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார். இந்த அறிக்கை ஈக்விஃபாக்ஸ் இன் உறுப்பினர்களாக உள்ள குறுநிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட டிசம்பர் *2021* தரவுகளின் தகவல்களை கணிசமான அடிப்படையாகக் கொண்டது. அறிக்கையை தயாரிப்பதில் ஈக்விஃபாக்ஸ் நியாயமான அக்கறை எடுத்துக் கொண்டாலும், குறுநிதி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தவறான அல்லது குறைவான தகவல்களால் ஏற்படும் துல்லியம், பிழைகள் மற்றும் / அல்லது குறைகளுக்கு ஈக்விஃபாக்ஸ் பொறுப்பேற்காது. மேலும், ஈக்விஃபாக்ஸ் அறிக்கையில் உள்ள தகவல்களின் போதுமான தன்மை அல்லது முழுமையை உறுதிப்படுத்தாது மற்றும்/அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் அதன் பொருந்தக்கூடிய தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை அல்லது அறிக்கையின் எந்தவொரு அணுகலுக்கும் அல்லது நம்பகத்தன்மைக்கும் ஈக்விஃபாக்ஸ் பொறுப்பல்ல, மேலும் ஈக்விஃபாக்ஸ் அத்தகைய அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படையாக மறுக்கிறது. இந்த அறிக்கை எந்தவொரு விண்ணப்பத்தையும், தயாரிப்பையும் நிராகரிப்பது/மறுப்பது அல்லது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரை அல்ல, அல்லது ஈக்விஃபாக்ஸ் இன் எந்தவொரு பரிந்துரையும் *(i)* கடன் வழங்கவோ அல்லது கடன் கொடுக்கவோ இல்லை. *(ii)* சம்பந்தப்பட்ட தனிநபர் / நிறுவனத்துடன் எந்தவொரு நிதி பரிவர்த்தனையிலும் நுழையவோ அல்லது நுழைய கூடாது என்றோ இல்லை. அறிக்கையில் உள்ள தகவல்கள் ஆலோசனையைக் கொண்டிருக்கவில்லை, மேலும் இந்த அறிக்கையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் அதன் கருத்தில் விவேகமான அனைத்து தேவையான பகுப்பாய்வுகளையும் பயனர் மேற்கொள்ள வேண்டும். அறிக்கையின் பயன்பாடு கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், *2005*, கடன் தகவல் நிறுவன விதிமுறைகள், *2006*, கடன் தகவல் நிறுவன விதிகள், *2006* ஆகியவற்றின் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. அறிக்கையின் எந்தப் பகுதியும் முன் ஒப்புதல்கள் இன்றி நகலெடுக்கவோ, புழக்கத்தில் விடவோ, வெளியிடப்படவோ கூடாது.

## தொடர்பு விவரங்கள்


ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ்
பிரைவேட் லிமிடெட்
யூனிட் எண் 931, 3வது தளம், கட்டிட எண் 9,
சாலிட்டைர் கார்பொரேட் பார்க்,
அந்தேரி காட்கோபார் லிங்க் ரோடு,
அந்தேரி (கிழக்கு),
மும்பை - 400 093

கட்டணமில்லா எண்.: 1800 2093247
ecissupport@equifax.com

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி
ஸ்வாவலம்பன் பவன்,
ப்ளாட் எண் சி-11, 'ஜீ' ப்ளாக்,
பாந்திரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கிழக்கு),
மும்பை - 400 051
மஹாராஷ்டிரா

கட்டணமில்லா எண்.: 1800 226753
www.sidbi.in/en



Copyright © 2022, Equifax Inc., Atlanta, Georgia. All rights reserved. Equifax is a registered trademarks of Equifax Inc.